**இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கை சபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கை சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக முழுமையாக தேய்விடப்பட்டிருந்த ரூபா 26,321,295 கிரமயான 04 மோட்டார் வாகனங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டவாறு இருந்த போதிலும், இந்த | நிறுவனத்திற்னு சொந்தமான சொத்துக்களின் மீளமதிப்பீட்டுக்காக குழுவொன்று நியமிக்கப்பட்ள்ளதுடன், குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் மேற்கொள்ள | இந்த வாகனங்களின் பயன்படு ஆயட்காலத்தினை கருத்திற்கொண்டு மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களின் பயன்படு ஆயட்காலமானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் கவனத்தில் எடுக்கப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதன் நியாயப் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதாக குறித்துவைத்துக் கொள்கின்றேன். | எடுக்கின்றேன். |
| (ஆ) | கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபையில் பேணிச் செல்லப்பட்ட கட்டிடத்திற்கு புதிய பகுதியொன்றினை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,460,000 முற்பணத் தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். திருத்துவதற்கு குறித்துவைத்துக் கொள்கின்றேன். | செலவினங்களின் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தி சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களக்காக நிறுவகம் செலுத்திய பாடநெறிக் கட்டணம் மற்றும் வங்கிக் கட்டணங்கள் மற்றும் தரகுப் பணம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூபா 473,770 தொகை மீளாய்வாண்டின் செலவினத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிராமையால், மீளாய்வாண்டின் மிகையானது அந்த அளவினால் அதிகரித்திருந்தது. | இணங்குகின்றேன். திருத்துவதற்கு குறித்துவைத்துக் கொள்கின்றேன். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 595,779 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 26,420,268 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 25,824,489 ஆன வீழ்ச்சிக்கு செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 85,428,844 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் இயற்கை வழி வேளாண்மை தொடர்பில் கவனம் செலுத்துவதன் முக்கியத்துவம் இனங்காணப்பட்டு அந்த துறையில் அதிக ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டிய துறைகள் 07 இனங்காணப்பட்டு, இலங்கையிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், இயற்கைவழி வேளாண்மை கொள்கை, தற்காலத்தில் சந்தைகளில் உள்ள நஞ்சற்ற உணவின் தரம் தொடர்பான ஆராய்ச்சிகள் 2017 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இயற்கைவழி வேளாண்மை தொடர்பில் தேசிய குழுவொன்றினால் விவசாயம் தொடர்பான அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுத்து செயலமர்வுகளை நடாத்தி, பங்குபற்றிய ஆராய்ச்சியாளர்களுக்கு முன்னுரிமைப் பிரகடனம் அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து பாடசாலைகளினதும் வாசிகசாலைகளுக்கும் முன்னுரிமைப் பிரகடனம் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது. | 24 ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு உரியதாக இந்த முன்னுரிமை அறிமுகப்படுத்தப்படுவதுடன், இந்த நிறுவனங்களின் ஊடாகவும் இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் ரோய்ச்சிகளின் எண்ணிக்கை, ஆராய்ச்சிகளுக்காக நிதியேற்பாடுகளை மேற்கொள்ளல், ஆராய்ச்சி அலுவலர் (Research Officer), விஞ்ஞானிகள (Scientist) மற்றும் ஏனைய பதவியணி தொடர்பான விபரங்கள் மற்றும் நிறுவனத்திற்கு செந்தமான பௌதீக வளங்கள் தொடர்பான தகவல்களும் மீளாய்வாண்டு வரையிலும் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் பின்னர் தரவுக் கட்டமைப்பினை நாளதுவரையாக்குதல் | 2018 ஆம் ஆண்டிற்கான தரவுக் கட்டமைப்பினை நாளதுவரையாக்குவதற்கு 28 நிறுவனங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்த தரவுகள் பொழிப்பாக்கப்பட்டு ஒரு தரவுக் கட்டமைப்பில் கோவைப்படுத்தும் இறுதிக் கட்டத்தில் உள்ளது. கோவைப்படுத்தல் நிறைவடைந்ததும், கட்டமைப்பினுள் சேர்க்கப்பட்டு யூலை மாதத்தின் இறுதியளவில் கட்டமைப்பு நாளதுவரையாக்கப்படும்.<br><br>ஒவ்வொரு வருடமும் அதற்கு முன்னைய வருடத்தின் தரவுகளே சேகரிக்கப்படுகின்றன. எனவே, 2020 ஆம் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்டது 2019 ஆம் | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கட்டமைப்பினை நாளதுவரையாக்கல் மற்றும் வெளியீடுகளை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (Informatiopn for Agriculture Research Managers) மற்றும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் அந்த தகவல்களை உள்ளடக்கி வருடாந்தம் வெளியிடப்பட வேண்டிய அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான தரவுகள் ஆகும். அதன் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்குரிய தரவுகள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் தரவுகளை சேகரித்து, தகவல் கட்டமைப்பினை முகாமை செய்தல் ஆகும். அதற்கு மேலதிகமாக தகவல் பரிமாற்றத்தினை இலகுபடுத்துவதற்காக வெளியீடுகளை அச்சிடல் 2010 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டது. கட்டமைப்பினை இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையால் அச்சிடும் தேவைப்பாடு இல்லை. | |
| (இ) | வங்காளதேச விவசாய ஆராய்ச்சி சபை, மலேசிய விவசாய ஆராய்ச்சி சபை மற்றும் கமநல ஆராய்ச்சி சபை ஆகியவற்றுக்கிடையே 2011 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், விவசாயத்துறையின் மதியுரையாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளை பரிமாற்றம் செய்தலின் கீழ் குறுங்கால வெளிநாட்டு பயிற்சிகளுக்காக 10 உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பயிற்சி சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் வங்காளதேச கமநல ஆராய்ச்சி கொள்கைச் சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட விஞ்ஞானிகளின் குழுவொன்று ''வாசனைத் திரவியங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் வாசனைத்திரவிய உற்பத்தி தொழில்நுட்பம்'' தொடர்பான இலங்கை ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆகும். இதனை வங்காளதேச கமநல ஆராய்ச்சி கொள்கைச் சபையுடன் இணங்கியதன் பிரகாரம் 2019 நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2019 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் இலங்கையின் சனாதிபதி தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டமையால், அதற்குரிய தங்குமிட வசதிகள் மற்றும் | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு பயற்சி சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயலமர்வுகள் பணிகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தியமையால் 2020 ஆம் ஆண்டிற்கு பிற்போடப்பட்டது. | |
| (ஈ) | வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் ஆராய்ச்சியாளர்கள் இலங்கையில் விவசாயத்துறையில் தற்போது எதிர்நோக்கப்படும் சவால்கள் மற்றும் எதிர்காலத்தில் முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி தமது ஆராய்ச்சி தலைப்பினை தெரிவு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கையின் விவசாய துறையின் வளர்ச்சிக்காக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியவைகள் இனங்காணப்பட்டுள்ள விவசாயப் பொறிமுறை மற்றும் இயற்கைவழி விவசாயத் துறையில் பட்டப்பின் படிப்பிற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறெனினும், இந்த நிலமையை முன்னேற்றுவதற்காக நிறுவனத்தினால் திட்டமிட்ட வகையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட துறைகளுக்கு தெரிவு செய்யப்படும் புலமைப்பரிசில் பெறுநர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கு பின்வருவன காரணமான அமைந்திருந்தன.<br>• பயற்சிகளுக்காக நிறுவனங்களால் தெரிவ செய்யப்பட்ட துறைகள்<br>• நிறுவனங்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆராச்சியாளர்களின் எண்ணிக்கை<br>• புலமைப்பரிசில் பெறுநர்கள் தெரிவு செய்யும் போது தாபனவிதிக்கோவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியமை. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் அவ்வாறா விசேடமான துறைகள் இனங்காணப்பட்டு, அதன் பிரகாரம் தமது ஆராய்ச்சி தலைப்பு தெரிவ செய்யப்பட வேண்டும் என எழுத்துமூலம் தெரிவித்து உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கும், நடைமுறையில் உள்ள நலிவுகள் இனங்காணப்பட்டு பொருத்தமன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019 ஆம் ஆண்டின் போது கமநல ஆராய்ச்சி நிறவனங்களிலிருந்து கோரப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 02 | இதற்காக விரிவான அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்காக அந்த நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த தகவல்களை கணக்காய்வுக்கு | புதிய செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும், தற்போதுள்ள செயற்திட்டங்களை உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்கள் மற்றும் கடந்த வருடங்களில் முன்கொண்டுவரப்பட்ட 4 செயற்திட்டங்கள் உள்ளடங்களாக 06 செயற்திட்டங்களுக்காக நிதி வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டு இதுவரை பூர்த்தி செய்யப்படாத தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 3 ஆராய்ச்சிகளுக்கு மற்றும் கமநல திணைக்களத்தின் 1 ஆராய்ச்சிக்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போது நிதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் செயலாற்றலை பௌதீக ரீதியில் பரிசோதிப்பதற்கு சபையின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், மீளாய்வாண்டிற்குரிய புதிய முன்மொழிவுகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தினை பரீட்சிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தற்போது உள்ள 11 ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் பூக்கள் செய்கை, காடு வளர்ப்பு, விவசாய பொறிமுறையாக்கம், இயற்கை வளங்களின் முகாமைத்துவம் ஆகிய நான்கு துறைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் போது 378 இனால் குறைவடைந்திருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள தேசிய குழுக்களுக்குரிய நிறுவனங்களில் தற்போது சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையால் மற்றும் அந்த பிரிவுகளில் அத்தியாவசிய நாளாந்த சேவைகளை வழங்குவதற்காக எஞ்சியுள்ள ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்த நேர்கின்னமையால், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக குறைந்த எண்ணிக்கை ஆகும். எதிர்காலத்தில் ஆராய்ச்சி | ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள மற்றும் நிதியேற்பாடுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டால் இந்த நிலைமை மாறும். மேலும், அதற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள் வரையறுக்கப்பட்டமையும் இதற்கு தாக்கமளித்திருந்தது. | |
| (எ) | கமநல ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக நான்கு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு மற்றும் இரு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கிய பணத்தில் கொள்கைச் சபைக்கு தீர்ப்பனவு செய்ய வேண்டிய ரூபா 659,131 ஆன தொகை இதுவரை அறவீடுவதற்கு நடவடிக்கை எடுக்காது 2006 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டு இருந்தது. | அதனை திருத்துவதற்கு முயற்சியெடுத்துள்ளதுடன், எதிர்காலத்தில் அதனை திருத்தி நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஏ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியனள் சேவை வழங்குவதற்காக சில தனியார் நிறுவனங்களால் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 192,890 ஆன தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | பொதுவாக இந்த வைப்புத் தொகைகள் குறித்த நிறுவனத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்ட பின்னரே விடுவிக்கப்படும். எனினும், குறித்த நிறுவனங்களினால் இதுவரை கோரிக்கை விடுக்கப்படாமையால் இந்த மீதிகளை தொடர்ச்சியாக நிதிக்கூற்றுகளில் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளாக காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்வரும் காலங்களில் இந்த பணத்தை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். | எழுத்துமூலம் தெரிவித்த பின்னர் குறித்த பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| 36 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள், பல வருடங்களாக நிலவும் வெற்றிடங்களுக்காக மீளாய்வாண்டின் போது ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் நிறுவனத்தின் பிரதான பதவிகள் 05, அதாவது தலைமை விஞ்ஞானி, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் வாசிகசாலை பொறுப்பாளர் ஆகிய பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தை துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |